IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No. 299/2021**

**நாள் – 18.12.2024**

**ம.சா.1 திரு.மிக்கேல்அந்தோணி –** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சென்ற வாகனம் சரக்கு வாகனம் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் சரக்கு வாகனத்தின் பின்புறம் அமர்ந்து பயணம் செய்தோம் என்றால் சரிதான். மோட்டார் வாகன சட்டத்தின் படி சரக்கு வாகனத்தின் பின்புறம் அமர்ந்து பயணம் செய்த நாங்கள் அனுமதியற்ற பயணிகள் என்றால் சரியல்ல. அனுமதிக்கப்படாத பயணிகளாக நாங்கள் உள்ளதால் எனக்கு எந்த இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சரக்கு வாகனத்தின் பதிவு சான்றிற்கு முரணாக நாங்கள் 7 பேர் சரக்கு ஏற்றும் பகுதியில் பயணம் செய்துள்ளோம் என்றும் அதனால் எனக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வாளின் அறிக்கையில் 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் சரக்கு வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் காலாவதியாகிவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் காலாவதியாகிவிட்டதால் மேற்படி நபருக்கு மோட்டார் வாகன அலுவலகத்திலிருந்து செக் ஸ்லிப் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

ம.சா.ஆ.4 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் கடந்த 14.12.2018ம் தேதி முடிந்துவிட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 2 காய சான்றில் எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற வழக்கில் இ.த.ச 337 பிரிவின் படி சாதாரண காயம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அரசாங்க மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதனால் எனக்கு

மருத்துவ சிகிச்சை தலைப்பில் இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பதால் எனக்கு எவ்விதமான வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. போலீசார் தாக்கல் செய்த இறுதி அறிக்கை இந்த மனுவின் சங்கதிகளுக்கு முரணாக இருப்பதால் இறுதி அறிக்கையை நான் வேண்டுமென்றே இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் தவிர்த்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சரக்கு வாகனத்தில் பயணம் செய்த காரணத்தினாலும், அதன் ஓட்டுநர் / உரிமையாளருக்கு ஒரு முறையான ஓட்டுநர்உரிமம் இல்லை என்பதாலும் எனக்கு இழப்பீடு கொடுக்கவேண்டுமென்றால் 1ம் எதிர்மனுதாரர் தான் வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

ஓம்/–S.மனோஜ்குமார்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி.